அரசு மைய அச்சகம், சென்னை – 600 079.

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

**மானியக் கோரிக்கை எண். 23**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

# 2014 - 2015

**செல்வி ஜெ ஜெயலலிதா**

முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2014

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | முன்னுரை | 1 – 4 |
| II. | வரலாறு | 4 – 7 |
| III. | குறிக்கோள்கள் | 8 – 12 |
| IV. | நிறுவன மற்றும் நிருவாக அமைப்பு | 12 – 16 |
| V. | செயல்பாட்டு முறை | 16 – 21 |
| VI. | மனிதவளம் | 21 – 23 |
| VII. | ஊர்திகள் மற்றும் கருவிகள் | 23 – 32 |
| VIII. | தகவல் தொடர்பு வசதிகள் | 33 – 36 |
| IX. | பயிற்சி வசதிகள் | 36 – 39 |
| X. | கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு | 39 – 40 |
| XI. | தீத் தடுப்பு முன் முயற்சிகள் | 41 – 49 |
| XII. | தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகள் | 49 – 50 |
| XIII. | நலத்திட்டங்கள் | 51 – 61 |
| XIV. | ஊக்குவித்தலும், ஊக்கத்தொகைகளும் | 61 – 67 |
| XV. | முன் முயற்சிகள் | 67 – 78 |
| XVI. | நிறைவுரை | 79 – 80 |
| | அட்டவணைகள் I - III | 81 – 83 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

# மானியக் கோரிக்கை எண். 23

# கொள்கை விளக்கக் குறிப்பு 2014 – 2015

## I. முன்னுரை

இயற்கையின் மூலக் கூறுகளில் ஒன்றான "தீ" அச்சமூட்டும் சக்தியினை கொண்டதாகும். இது நாகரீக வாழ்க்கைக்கு இன்றியமையாதது; ஆனால், கவனமாகக் கையாளப்படாத நேர்வுகளில், தீயானது, அபாயகரமானது; அழிக்கும் தன்மையுடையது; பேராபத்து விளைவிக்கக் கூடியது. ஈடுசெய்ய இயலாத இழப்புகள், அளவிட முடியாத அழிவுகள், சொல்லொணா துன்பங்கள் ஆகியன தீ விபத்துகளால் ஏற்படுகின்றன. சமுதாயத்தில் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நாகரீகம் மற்றும் மக்கள் தொகை, பெருகி வரும் பலமாடிக்

கட்டடங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றால் தீயினால் ஏற்படும் ஆபத்து அதிகமாகியுள்ளது. சேமித்து வைக்கப்படும் எளிதில் தீப்பற்றக் கூடிய திரவங்களாகிய பெட்ரோல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு போன்றவை தீயின் அபாயத்தினை மேலும் அதிகரிக்கின்றன. எனவே, தீ விபத்தைத் தடுப்பது மட்டுமின்றி தீயின் அழிவிலிருந்து உயிருக்கும், உடமைக்கும் போதுமான பாதுகாப்பு அளிப்பதும் இன்றியமையாததாகி விட்டது. மாநில மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில், தீயணைக்கும்போது ஏற்படும் சவால்களை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்கள் ஒவ்வொரு நாளும் எதிர்கொண்டு வருகின்றனர். ஆபத்தான மற்றும் அவசர காலங்களில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் இத்துறையின் முயற்சி மற்றும் முனைப்பான செயல்பாடுகளும் ஊடகங்கள் மற்றும் பொதுமக்களின் வெகுவான பாராட்டைப்

பெற்றுள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையும் சவால்களை எதிர்கொள்ள தன்னை ஆயத்தப்படுத்தி கொள்ளும் விதமாக, நவீன சாதனங்கள் மற்றும் ஊர்திகள் மூலம் வலுப்படுத்துதல், பணியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சியளித்தல், தீ அபாயம் உள்ள இடங்களில் புதிய நிலையங்கள் நிறுவுதல், கட்டடங்களின் பாதுகாப்பினை உறுதிபடுத்தும் வகையில் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் செயல் திறமுடைய மற்றும் ஆக்கப்பூர்வமான உயிர் காப்பு வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்தல், பொதுமக்களிடையே பாதுகாப்பு குறித்த கல்வி அறிவு புகட்டுதல் போன்றவற்றினை மேற்கொண்டு வருகிறது. எனது அரசின் தொடர்ச்சியான ஆதரவினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கத்தினால் தான் இந்த உயரிய செயலாக்கம் சாத்தியமாயிற்று. இத்துறையின்

பணியாளர்கள் “காக்கும் பணி எங்கள் பணி” என்பதை குறிக்கோளாகக் கொண்டு, தங்களது உயிரையும் துச்சமென கருதி மக்களுக்கு தொடர்ந்து கடுமையாக சேவையாற்றி வருகிறார்கள்.

## II. வரலாறு

“மெட்ராஸ் தீயணைப்புப் படை” (Madras Fire Brigade) என்ற பெயரில் 1908–ஆம் ஆண்டு சிறிய குழுவாக உருவாக்கப்பட்டு, சென்னை மாநகர காவல் ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வந்த தீயணைப்புப் படை பிரிவானது, படிப்படியாக வளர்ச்சியடைந்து 1945–ஆம் ஆண்டில் 55 தீயணைப்பு நிலையங்களைக் கொண்டதாக வளர்ச்சியடைந்தது. தமிழக தீயணைப்புத்துறையானது, துவக்க காலத்திலிருந்தே அதன் செயல்பாட்டில் பாரம்பரியத்தினை கொண்டதாக இயங்கி வருகிறது. உயிர்களையும்

உடைமைகளையும் காப்பாற்றுவது தீயணைப்பு வீரர்களின் கடமையாகும். வளர்ந்து வரும் இத்துறையின் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு, 1967–ஆம் ஆண்டில், காவல் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, தீயணைப்புத் துறையானது புதியதாக உருவாக்கப்பட்டு பொதுமக்களின் உயிர்களையும் மற்றும் உடைமைகளையும் காப்பாற்றும் வகையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி ஆகிய இருவித பணிகளை மேற்கொள்ளும் வகையில் படிப்படியாக மாற்றப்பட்டது. பொதுமக்கள் சரியாக உணர்ந்து பாராட்டும் வகையில், ஒரு புதிய தோற்றத்தை அளிக்கும் வண்ணம், இத்துறையின் பெயர் "தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை" என 2001–ஆம் ஆண்டில் எனது அரசால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தீயணைப்புப் பணி என்பது, பேராபத்து நிறைந்த பணி என்பதைக் கருத்தில் கொண்டு, 2000–ஆம் ஆண்டு வரை

பெண்கள் தீயணைப்பு வீரர்களாக நியமனம் செய்யப்படவில்லை. **2001–ஆம்** ஆண்டில், பெண்களும் ஆபத்து நிறைந்த பணிகளில், பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சரிசமமாக சேவையாற்றிட முடியும், அதுவும் குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்களை மனித நேயத்துடன் காப்பாற்றிட பணிபுரிய முடியும் என்ற அடிப்படையில் ஆண்–பெண் பாலின பாகுபாட்டினை களையும் விதமாக, பெண்களை இத்துறையில் நியமிக்க எனது அரசு முடிவெடுத்தது. இதன் மூலம் நாட்டிலேயே முதன்முதலாக பெண்களை தீயணைப்பு அலுவலர்களாக நியமிக்க உத்தரவிட்ட மாநிலம் தமிழக அரசு தான் என்ற பெருமையினை எனது ஆட்சிக் காலத்தில் பெற்றது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணிகள், கடமைகள், பணியாளர் நிலை, பொறுப்புகள் மற்றும் நவீனப்படுத்துதல் ஆகியவற்றை ஆராயவும்

ஆலோசனைகள் வழங்கவும் ‘‘தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையம்’’ 2002–ஆம் ஆண்டு அமைக்க ஆணையிடப்பட்டு, இந்தியாவிலேயே முதன்முறையாக இத்தகைய ஆணையம் அமைத்த பெருமையை எனது அரசு பெற்றது. ஆணையத்தின் ஆலோசனைகள் எனது அரசால் ஏற்கப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டன. ஒரு நகரத்தை அடிப்படையாகக் கொண்டு தீயணைப்புப் படை என்ற ஒரு சிறிய அமைப்பாக உருவான தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, இந்த அரசு மேற்கொண்ட உறுதியான தொடர்முயற்சிகளால் மாநில அளவில் பல்வேறு விதமான வளர்ச்சியினை அடைந்துள்ளது. தற்சமயம், இத்துறையானது 302 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களையும், கோத்தகிரி மற்றும் ஒகேனக்கல் ஆகிய இடங்களில் தனிப்பட்ட 2 மீட்புப் பணி நிலையங்களையும் கொண்டுள்ளது.

## **III. குறிக்கோள்கள்**

பேரழிவை ஏற்படுத்தும் தீயிலிருந்து உயிர்களையும் உடைமைகளையும் காப்பதே இத்துறையின் முதன்மையான பணியாகும். நாட்டில் உள்ள மிகவும் திறமை வாய்ந்த தீயணைப்புப் படைகளில் ஒன்றென தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது புகழ் பெற்று, தனது நற்பெயரை நிலை நாட்டியுள்ளது. இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச் சரிவுகள், இதர பேரிடர்கள் மற்றும் விபத்துகளான கட்டட இடிபாடுகள், வெடி விபத்துக்கள், இரயில் விபத்துக்கள், சாலை போக்குவரத்து விபத்துக்கள் மற்றும் அபாயகரமான வாயு கசிவு போன்றவற்றால் ஏற்படும் பேரழிவுகளில் பாதிப்படைவோரை காப்பாற்றுதலும் மற்றும் அவசர உதவி புரிதலும் இத்துறையின் பணிகள் ஆகும். தேர்தல்கள்,

கலவரங்கள், கேளிக்கைகள், விழாக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகிய காலங்களில், காவல்துறைக்கு இத்துறை உதவிபுரிந்து வருகிறது. உரிமம் வழங்குவதை முறைப்படுத்தும் வகையில், உயர்மாடிக் கட்டடங்கள், தீ அபாயம் நிறைந்த தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்கள் ஆகியவற்றிற்கு உரிமங்கள் வழங்க அதிகாரம் படைத்த பல்வேறு துறை அலுவலர்களுக்கு, இவ்விடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய தீப்பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்கும் பணியையும் இத்துறை ஆற்றி வருகிறது. பொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகள் ஆகியவை நடத்தப்படுமிடங்களில், சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தீத்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்யும் வகையில்,

இத்துறையிலிருந்து தடையின்மை சான்று பெற்ற பின்னரே அனுமதிக்கப்படுகின்றன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது தீத்தடுப்பு நடவடிக்கைகள் குறித்த பணியிலும் ஈடுபட்டு வருகிறது. பொதுமக்களிடையே தீயின் அபாயம் குறித்தும் மற்றும் தீப்பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும் விழிப்புணர்வினை ஏற்படுத்த இத்துறைக்கு பதிமூன்று தீத்தடுப்பு குழுக்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. தீத்தடுப்புக் குழுக்களானது தீப்பாதுகாப்பு, தீத்தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்துவதுடன் தீப்பாதுகாப்பு தொடர்பான வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. தீத்தடுப்புக் குழுவானது தங்களது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டடங்களில் வசிப்பவர்களுக்கு ஏதேனும் அவசர நிகழ்வுகள் ஏற்படுவதற்கு முன்னர்

அக்கட்டடங்களில் உள்ள தீப்பாதுகாப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து உறுதி செய்து கொள்வதுடன், அவற்றினை அவ்விடங்களில் குடியிருப்பவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் செயலாற்றி வருகிறது. குறும்படங்கள் உட்பட பல்வேறு பிரச்சார சாதனங்களை இத்துறை பயன்படுத்தி வருவதுடன், தெருமுனை நாடகங்கள், பொம்மலாட்டங்கள் மற்றும் ஒத்திகைப் பயிற்சிகளை பள்ளி மாணவர்கள், இல்லத்தரசிகள், கிராமப்புற பெண்கள், குடிசை வாழ் மக்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு வருகை தரும் பொதுமக்கள், உயர்மாடிக் கட்டடங்கள் மற்றும் அலுவலக வளாகங்களில் உள்ளவர்கள் பயனடையும் விதமாக மேற்கொண்டு வருகிறது.

தீப்பாதுகாப்பு நடவடிக்கையின் பலன் உடனடியாக அறிய இயலாது. எனினும், இது ஒரு

நீண்டகால பயனை அளிக்கத் தக்க ஒன்று ஆகும். உயிர் காக்கும் உத்திகளை தெரிந்து வைத்திருப்பதன் மூலம், தங்களுக்குள்ள இந்த அறிவினை பொதுமக்கள் எந்த ஒரு நேரத்திலும் உயிரையும் உடமைகளையும் காப்பாற்றிக் கொள்ள பயன்படுத்திக் கொள்ளலாம்.

## IV. நிறுவன மற்றும் நிருவாக அமைப்பு

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிருவாக அமைப்புகள் குறித்த விவரங்கள் அட்டவணை–I மற்றும் II–ல் அளிக்கப்பட்டுள்ளன.

இந்திய காவல் பணியைச் சேர்ந்த காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் நிலையில் உள்ள உயர் அலுவலர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் இயக்குநராக உள்ளார். தொழில்நுட்ப மற்றும் நிர்வாக

இனங்களில் முறையே துணை இயக்குநர் (தலைமையிடம்) மற்றும் துணை இயக்குநர் (நிருவாகம்) ஆகியோர் இயக்குநருக்கு உதவி புரிகிறார்கள். பொதுமக்களுக்கு சேவையாற்றுவதில் இத்துறையின் செயல்பாடு நாளுக்குநாள் வளர்ந்து வருவதினைக் கருத்திற்கொண்டு, துணை இயக்குநர் (தலைமையிடம்) பதவி உருவாக்கப்பட்டது. இத்துறையானது வடமண்டலம், வடமேற்கு மண்டலம், மத்திய மண்டலம், மேற்கு மண்டலம் மற்றும் தென்மண்டலம் என ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு முறையே சென்னை, வேலூர், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும் ஒரு இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

மண்டலங்கள் 34 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் ஒரு மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. ஊட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு நீலகிரி மாவட்டத்தில் ஒரு புதிய கோட்டம் அமைக்க அரசால் ஆணையிடப்பட்டு, இது 11.06.2014 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிர்வாக அமைப்பில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அடிப்படை அலகாகும். ஒவ்வொரு நிலையமும் ஒரு நிலைய அலுவலரின் தலைமையில், மாவட்ட அலுவலரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப் பகுதியின் கீழ் வரும் துரைப்பாக்கம், வேளச்சேரி, விருகம்பாக்கம், மதுரவாயல் மற்றும் மாதவரம் ஆகிய 5 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும்

மீட்புப் பணி நிலையங்கள் நிறுவ எனது அரசு **3** கோடியே **70** லட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது. தற்போது மாதவரத்தில் புதியதாக திறக்கப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் உட்பட **302** தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களும், இவை தவிர ஒகேனக்கல் மற்றும் கோத்தகிரி ஆகிய இரண்டு இடங்களில் மீட்புப் பணிகளுக்கென தனியாக நிலையங்களும் உள்ளன.

தாம்பரத்தில் ஒரு மாநில பயிற்சி மையம், இணை இயக்குநர் (பயிற்சி மற்றும் மீட்புப் பணிகள்) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்களை கண்டறிய ஏதுவாக, ஆறு மோப்ப நாய்களை கொண்ட மோப்ப நாய்ப் படை ஒன்று மாநிலப் பயிற்சி மையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. தீயணைப்புத் துறையில்

மோப்பநாய் படை கொண்ட ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்துறையில் உள்ள ஊர்திகளின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக சென்னையில் ஒரு மாநிலப் பட்டறை இணை இயக்குநர் (பயிற்சி மற்றும் மீட்புப் பணிகள்) அவர்களின் கண்காணிப்பின் கீழ் செயல்பட்டு வருகிறது.

## V. செயல்பாட்டு முறை

இத்துறையின் அடிப்படை அலகு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஆகும். ஒவ்வொரு நிலையமும் ஒரு நிலைய அலுவலர் தலைமையின் கீழ் இரண்டு முன்னணி தீயணைப்போர், ஒரு இயந்திர கம்மியர் ஓட்டுநர், இரண்டு தீயணைப்போர் ஓட்டுநர்கள் மற்றும் பதினோறு தீயணைப்போர்களுடன் செயல்படுகிறது. ஒரு நீர்தாங்கி வண்டியும் மற்றும்

அதற்குரிய இதர உபகரணங்களுடன் வழங்கிட **35** லட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும். மேலும், நிலையச் செயல்பாட்டிற்கு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் இதர படிகள் தொடர்பாக ஆண்டொன்றிற்கு **49** லட்சம் ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும். நிலையத்திற்கு சொந்தமாக ஒரு கட்டடம் கட்டும் வரை, நிலையச் செயல்பாட்டிற்காக வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்படும் கட்டடத்திற்கு ஆண்டொன்றிற்கு **6** லட்சம் ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும். எனவே, ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஏற்படுத்துவதற்கு தோராயமாக **90** லட்சம் ரூபாய் செலவு ஏற்படும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களின் மாவட்ட வாரியான எண்ணிக்கை விவரம் அட்டவணை–IIIல் அளிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்

துவக்குவதற்கு பின்வரும் அளவுகோல்கள் பின்பற்றப்படுகின்றன:-

(i) **25** கி.மீ. சுற்றளவிற்குள் எந்த ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இருத்தல் கூடாது.

(ii) ஒவ்வொரு நிலையமும் குறைந்தபட்சம் **50,000** மக்கள் தொகைக்கு சேவை செய்வதாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

(iii) ரூபாய் **50,000/–** அளவுக்கு பொருட்சேதம் ஏற்படக் கூடிய தீ விபத்திற்கான வாய்ப்புகள் உள்ள பகுதியாக இருத்தல் வேண்டும்.

ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால், ‘**101**’ என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கலாம். மேலும், ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கும் தனியே தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தீ விபத்து குறித்த தகவல்கள் மாநில தலைமை கட்டுப்பாட்டு அறையிலிருந்து கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி மூலம் அருகிலுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு பரிமாற்றம் செய்யப்பட்டு, தீயணைப்பு ஊர்தி உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தேவை ஏற்படின், அருகில் உள்ள நிலையங்களிலிருந்தும் தீயணைப்பு ஊர்திகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஊரகப் பகுதிகளில், தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்பு குறித்து பெறப்படும் தகவல்கள் நிலைய முன்னணித் தீயணைப்போரால் பதிவு செய்யப்பட்டவுடன், தீயணைப்பு ஊர்தி குழுவிற்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டு, தீயணைப்பு ஊர்தி சம்பவ இடத்திற்கு விரைந்து அனுப்பி வைக்கப்படுகிறது. ஊர்தி

சம்பவ இடத்தினை நோக்கி சென்று கொண்டிருக்கும்போதே, தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பு உடைகளை அணிந்து கொண்டு பணியில் ஈடுபட தங்களை தயார் செய்து கொள்கிறார்கள்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது பேரழிவு மேலாண்மை பணிகளிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. இயற்கை இடர்பாடுகளான புயல், வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்றவைகளை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் இத்துறையானது தயார்படுத்தப்பட்டுள்ளது. வெள்ளக் காலங்களில் கண்ணாடி இழையிலான படகுகள், மிதவைப் படகுகள், உயிர்காக்கும் ரப்பர் மிதவைகள் மற்றும் உயிர் காக்கும் மேலங்கிகள் ஆகியவற்றை கொண்டு, காப்பாற்றும் பணியில் ஈடுபட, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட நீச்சல் வீரர்களை இத்துறை கொண்டுள்ளது. மேலும்,

கட்டட இடிபாடுகள், நிலச்சரிவுகள், மூடப்படாத ஆழ்துளை கிணறுகள், மரங்கள் விழுதல் போன்றவற்றில் சிக்குண்டவர்களை சிறப்பு கருவிகளைக் கொண்டு காப்பாற்ற, பயிற்றுவிக்கப்பட்ட தீயணைப்போர்களை இத்துறை கொண்டுள்ளது. எத்தகைய பேரிடர் ஏற்படினும் மக்களை காப்பாற்றவும் மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்லவும் தீயணைப்போர்களுக்கு முழுமையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## VI. மனித வளம்

இத்துறை, மொத்தம் **6,805** களப் பணியாளர்கள் மற்றும் **347** அமைச்சுப் பணியாளர்களை கொண்டுள்ளது. பல்வேறு தரத்தில் களப்பணியாளர்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்ட எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

| வ.எண் | பதவியின் பெயர் | பதவியின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இயக்குநர் | 1 |
| 2. | இணை இயக்குநர் | 3 |
| 3. | துணை இயக்குநர் | 4 |
| 4. | மாவட்ட அலுவலர் | 35 |
| 5. | உதவி மாவட்ட அலுவலர் | 46 |
| 6. | நிலைய அலுவலர் | 340 |
| 7. | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 169 |
| 8. | உதவி நிலைய அலுவலர் | 16 |
| 9. | முன்னணி தீயணைப்போர் | 787 |
| 10. | இயந்திர கம்மியர் ஓட்டுநர் | 111 |
| 11. | தீயணைப்போர் ஓட்டுநர் | 1104 |
| 12. | தீயணைப்போர் | 4189 |
| | **மொத்தம்** | **6805** |

மேலும், துரைப்பாக்கம், வேளச்சேரி, விருகம்பாக்கம் மற்றும் மதுரவாயல் ஆகிய

இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் திறக்கப்பட்டவுடன், இந்நிலையங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள **68** பணியாளர்களையும் சேர்த்து ஒப்பளிக்கப்பட்ட பதவிகளின் மொத்த எண்ணிக்கையானது **6,805** லிருந்து **6,873** ஆக உயரும்.

இத்துறையில், தீயணைப்போர் பதவிக்கு **2013**ஆம் ஆண்டிற்காக புதியதாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை **1,005** என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு குழுமத்தினரால் ஆட்கள் தேர்ந்தெடுக்கும் பணி விரைவில் துவங்கப்படும்.

## VII. ஊர்திகள் மற்றும் கருவிகள்

**ஊர்திகள் :**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ள ஏதுவாக,

இத்துறைக்கு பின்வரும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன:—

| வ. எண் | ஊர்தியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நீர்தாங்கி வண்டிகள் | **356** |
| 2. | நோயாளர் ஊர்திகள் | **82** |
| 3. | சிறிய நுரை தகர்வு ஊர்திகள் | **14** |
| 4. | அவசர கால மீட்பு ஊர்திகள் | **20** |
| 5. | திரவ ஆற்றலால் இயங்கும் மேடை கொண்ட ஊர்தி | **1** |
| 6. | சுழல் மேஜை ஏணி ஊர்தி | **1** |
| 7. | திரவ ஆற்றலால் இயங்கும் மேடை கொண்ட சுழல் மேஜை ஏணி (வான் நோக்கி உயரும் ஏணி ஊர்திகள்) முறையே 37 மற்றும் 42 மீட்டர் உயரும் ஏணி கொண்ட ஊர்திகள் | **2** |
| 8. | வான் நோக்கி உயரும் 54 மீட்டர் நீளம் ஏணி கொண்ட ஊர்திகள் | **2** |
| 9. | நீர் விடுகுழாய் பதிக்கும் ஊர்தி | **1** |
| 10. | தண்ணீர் லாரிகள் | **55** |

| | | |
|---|---|---|
| 11. | மீட்பு இழுவை ஊர்தி | **1** |
| 12. | நகரும் பழுது பார்க்கும் ஊர்திகள் | **2** |

மேலும், அலுவலர்களும் மற்றும் பணியாளர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல ஏதுவாக ஜீப்புகள், சீருந்துகள், சிறிய பேருந்துகள், பெரிய பேருந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் போன்ற சார்பு ஊர்திகளும் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் பொருட்டும், தண்ணீரை பயன்படுத்தும்போது ஏற்படும் சேதத்தினை குறைக்கும் விதமாகவும் தீயணைப்பு உத்திகளில் தண்ணீரை மிக நுண்ணிய பனித் திவலைகளாக உருவாக்கி பீய்ச்சி அடிக்கும் (Watermist technology) நவீன தொழில் நுட்ப உத்தி பின்பற்றப்படுகிறது. இதன்படி, தண்ணீர் அல்லது தண்ணீருடன்

நுரைகலவையை கலந்து அதிக அழுத்த திறன் கொண்ட பம்பு மூலம் சிறந்த தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட வெளியேற்றும் குழாய் வழியாக துரிதமாக சிறந்த முறையில் தீ அணைக்கப்படுகிறது. இந்த நவீன தொழில்நுட்ப உத்தியினை பயன்படுத்தி மிகப்பெரிய தீ விபத்துக்களிலும் குறைந்த தண்ணீரைக் கொண்டு தீயினை அணைக்க இயலும். **2012–2013**ஆம் ஆண்டில், **4,500** லிட்டர் கொள்ளளவு கொண்ட **9** நவீனரக நீர்தாங்கி வண்டிகள் மற்றும் தண்ணீரை பனித்திவலைகளாக மாற்றி பீய்ச்சி அடிக்கும் தொழில்நுட்பம் கொண்ட (Watermist technology) 600 லிட்டர் கொள்ளளவு நீர்த்தொட்டி கொண்ட **5** சிறியரக நீர்தாங்கி வண்டிகளும் மற்றும் **350** லிட்டர் கொள்ளளவு நீர்த்தொட்டி கொண்ட **8** சிறியரக நீர்தாங்கி வண்டிகளும் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், குறுகிய சந்துகளிலும் மற்றும் நெருக்கடி மிகுந்த பகுதிகளிலும் தீயணைப்புப் பணிகளை

மேற்கொள்ளும் வகையில், எளிதில் தூக்கிச் செல்லத் தக்க, தண்ணீரை பனித்திவலைகளாக மாற்றி பீய்ச்சி அடிக்கும் தொழில்நுட்பம் கொண்ட கருவிகள் இருபுறமும் பொருத்தப்பட்ட 35 விசை மிதிவண்டிகள் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

2013–2014–ஆம் ஆண்டில், 4,500 லிட்டர் கொள்ளளவு கொண்ட 10 நவீனரக நீர்தாங்கி வண்டிகள் 4.08 கோடி ரூபாயில் வாங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த ஊர்திகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட் நிறுவனத்தின் கட்டுமானத்தில் உள்ளன. மேலும், 350 லிட்டர் கொள்ளளவு கொண்ட அதிக அழுத்த திறன் கொண்ட பம்ப்புகள் பொருத்தப்பட்ட 52 விரைவு ஊர்திகள் 4.61 கோடி ரூபாய் செலவினத்தில் வாங்கப்பட்டு அனைத்து முக்கிய நகரங்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன.

விண்ணை முட்டும் அளவிற்கு உயரமான கட்டடம் கட்டுபவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிவரும் நிலையில், தீயணைக்கும் உத்திகளின் திறனை அதிகரிக்கும் வகையில் துறையினை நவீனப்படுத்தும் விதமாக, 54 மீட்டர் வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்தி ஒன்று கூடுதலாக வாங்க 5.97 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், 2013–2014–ஆம் ஆண்டில், எனது அரசானது 101 மீட்டருக்கு குறைவில்லாமல் வான்நோக்கி நீளும் ஏணி கொண்ட 2 ஊர்திகள் 39.74 கோடி ரூபாய் செலவினத்தில் வாங்க ஒப்பளித்துள்ளது. இவ்வூர்திகள் கொள்முதல் செய்யப்பட்டவுடன் நம் நாட்டிலேயே இத்தகைய உயரம் வரை வான்நோக்கி நீளும் ஊர்திகள் கொண்ட முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை அடையும்.

**கருவிகள் :**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை திறம்பட மேற்கொள்ள ஏதுவாக, நச்சு வாயுக்களை கண்டுபிடிக்கும் கருவிகள், மின்னாக்கிகள், திரவ ஆற்றலால் இயங்கும் வெட்டும் கருவிகள், விரிக்கும் கருவிகள் மற்றும் கோம்பி கருவிகள் என்றழைக்கப்படும் வெட்டுதல் மற்றும் விரித்தல் ஆகிய இரு திறன்கள் ஒருங்கிணைந்த கருவிகள் போன்றவை தேவையான அளவு வழங்கப்பட்டுள்ளன. மேலும், வெள்ளம் மற்றும் புயல் தாக்குதலால் நீரில் மூழ்கும் பகுதிகளிலிருந்து மக்களை காப்பாற்றுவதற்காகவும் மற்றும் பல்வேறு விதமான பேரிடர்களை எதிர்கொள்ளவும் கீழ்க்கண்ட மீட்புக் கருவிகள் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன:–

| வஎண் | கருவிகளின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கண்ணாடி இழைகளிலான விசைப்படகுகள் | 8 |
| 2. | உயிர் காக்கும் மிதவைகள் மற்றும் மேலங்கிகளுடன் கூடிய மிதவைப் படகுகள் | 69 |
| 3. | அனல் வழி உருவம் அறியும் நிழற்படக் கருவி | 1 |
| 4. | பல்வகை நச்சு வாயுக்களை கண்டுபிடிக்கும் கருவிகள் | 2 |
| 5. | உயிரோடு உள்ளவரை கண்டறியும் கருவி | 3 |
| 6. | இடிபாடுகளில் சிக்கிக் கொண்டவர்கள் உள்ள இடத்தினை அடையாளம் காட்டும் கருவிகள் | 3 |
| 7. | நீட்டிச் சுருங்கும் ஆற்றல் கொண்ட அவசர கால விளக்குகள் | 49 |

| | | |
|---|---|---|
| 8. | மின்னாக்கியுடன் கூடிய மின் ரம்பங்கள் | 75 |
| 9. | பெட்ரோலில் இயங்கும் **5** குதிரை சக்தித் திறன் கொண்ட எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய மின் ரம்பங்கள் | 41 |
| 10. | சிமெண்ட் கலவை கட்டமைப்புகளை உடைக்கும் கருவிகள் | 18 |
| 11. | புகை வெளியேற்றும் கருவிகள் | 17 |
| 12. | முன்னும் பின்னும் இயங்கக் கூடிய ரம்பங்கள் | 17 |
| 13. | எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய வட்ட ரம்பங்கள் | 17 |
| 14. | எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய துளையிடும் மின் கருவிகள் | 17 |
| 15. | சுருங்கும் வடிவமைப்பு ஏணிகள் | 51 |
| 16. | தீ பாதிக்காத உடைகள் | 81 |
| 17. | ரசாயன பாதுகாப்பு உடைகள் | 111 |
| 18. | தீ பாதிக்காத கையுறைகள் | 222 ஜோடி |

| | | |
|---|---|---|
| 19. | பணியாளர் தற்காப்பு உடைகள் | 175 ஜோடி |
| 20. | அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய பம்ப்புகள் | 228 |
| 21. | மிதவைப் பம்ப்புகள் | 93 |

தீயணைப்பு வீரர்களுக்கு முழுமையான பாதுகாப்பு அளிக்கும் வகையில், **1980** பணியாளர் தற்காப்பு உடைகள் **28** கோடி ரூபாய் செலவில் வாங்குவதற்கு எனது அரசால் ஒப்பளிப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், **2013–2014**–ஆம் ஆண்டில், இத்துறைக்கு மீட்புப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ள பயன்படும் கோம்பி கருவிகள் என்றழைக்கப்படும் வெட்டும் மற்றும் விரிக்கும் இரு திறன்கள் ஒருங்கிணைந்த **38** கருவிகள், **75.43** லட்சம் ரூபாய் செலவினத்தில் வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## VIII. தகவல் தொடர்பு வசதிகள்

தீயணைப்புப் பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் திறன்களில் விரைந்து செயலாற்றுதல் மிக முக்கியமான ஒன்றாகும். உரிய நேரத்தில் பணியாற்றுவதற்கு துரிதமான தகவல் பரிமாற்றமும், குறைந்த நேரத்தில் படைகளை இடம் பெயர் ஆற்றலும் முக்கியமான தேவைகளாகும். தீ விபத்து அழைப்புகளை பெற்று விரைந்து செயலாற்ற ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்திற்கும் ஒரு தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. 101 மற்றும் 102 என்ற எண்கள் கொண்ட, கட்டணமில்லா தொலைபேசி இணைப்புகளைக் கொண்டு நவீனமயமாக்கப்பட்ட தீக்கட்டுப்பாட்டறை சென்னை நகரில் செயல்பட்டு வருகிறது. மேலும், தீயணைப்பு ஊர்திகள் சம்பவ இடங்களுக்கு உரிய நேரத்தில் செல்வதை இணைய தளம் வழியாக

கண்காணிக்கும் கணினி வசதி கொண்ட, 'ஜிபிஆர்எஸ்' என்றழைக்கப்படும் அமைப்பு கட்டுப்பாட்டு அறையில் பொருத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட தலைமையிடங்களிலும் மற்றும் பெரிய நகரங்களிலும் '101' என்ற கட்டணமில்லா தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி கட்டணமில்லா தொலைபேசி மூலம் தகவல் பெற்றவுடன், சம்பந்தப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தினைச் சேர்ந்த பணியாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு, சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல நிலைய அலுவலர் / முன்னணித் தீயணைப்போர் மூலம் உத்திரவிடப்படுகிறார்கள். நிலைய அலுவலர் மற்றும் அதற்கு மேல் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் கைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், தீயணைப்பு படை வீரர்களுக்கு துரிதமாக தகவல் தெரிவித்து உரிய நேரத்தில் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்திட

ஏதுவாக சென்னை மாநகரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கு கம்பியில்லா அலைவரிசை தகவல் தொடர்பு கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பதில் செயல்பாடு நேரமானது (Response Time) விபத்து அழைப்பு பெறப்பட்ட நேரத்திலிருந்து விபத்து நடந்த இடத்தை சென்றடைய முதல் தீயணைப்பு ஊர்தி எடுத்துக் கொள்ளும் நேரமாகும். போக்குவரத்து நெரிசல் அதிகம் இருக்கின்ற போதிலும், பதில் செயல்பாடு நேரத்தினை குறைக்க இத்துறை தொடர்ந்து முயற்சித்து வருகிறது. பதில் செயல்பாடு நேரமானது சென்னை மாநகரில் சுமார் 6 நிமிடங்களாகவும், பிற இடங்களில் 10 நிமிடங்களுக்கு குறைவாகவும் இருக்க வேண்டும் என்ற இலக்கினை கொண்டு

செயலாற்றி வருகிறது. பதில் செயல்பாடு நேரத்தை மேலும் குறைக்க தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கென "http://www.tnfrs.tn.nic.in" என்ற முகவரி கொண்ட வலைதளம் தேசிய தகவல் தொடர்பு மையத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வலைதளம் தீப்பாதுகாப்பு குறித்து தகவல்கள் அளிப்பதுடன், கட்டட விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள கட்டாய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் உரிம நிபந்தனைகள் குறித்த அனைத்து தகவல்களையும் அளிக்கின்றது.

## IX. பயிற்சி வசதிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது தனது பணியாளர்களுக்கு அனைத்து நிலைகளிலும் பயிற்சியளிப்பதில்

முக்கிய கவனம் செலுத்துகிறது. இதற்கென தாம்பரத்தில் ஒரு மேம்படுத்தப்பட்ட நவீன பயிற்சி மையத்தினை கொண்டுள்ளது. தற்போது வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தீயினை அணைக்க கையாளப்படும் தொழில் நுணுக்க உத்திகளை இத்துறையின் அனைத்து தரத்திலும் உள்ள பணியாளர்கள் அறிந்துகொள்ளும் விதமாக நல்ல தரமான பயிற்சியளிப்பதற்கு தேவையான நவீன பயிற்றுவிப்பு சாதனங்களை கொண்டுள்ளது. இம்மாநில பயிற்சி மையத்தின் தனித் திறமைகளைக் கருத்தில் கொண்டு, நாக்பூர் தேசிய தீயணைப்புக் கல்லூரியின் மண்டல பயிற்சி மையங்களில் ஒன்றாக இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தினால் இப்பயிற்சி மையம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பிற மாநிலங்கள், அரசு சார்புடைய பொது நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களின் தீயணைப்பு வீரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் மாநிலப் பயிற்சி மையமானது பயிற்சி அளித்து வருகின்றது. கோட்ட தலைமையிடங்கள் அனைத்திலும் தனிப்பட்ட நபர்களுக்கு ஒரு வாரகாலத்திற்கு நபர் ஒருவருக்கு **1,000/–** ரூபாய் என்ற கட்டண அடிப்படையில் அடிப்படை தீயணைப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. **2013**–ஆம் ஆண்டில், தீயணைப்பு பற்றிய அடிப்படை செயல்முறைப் பயிற்சி **3,787** தனி நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய மருத்துவ கழகத்தினரால் **2014**–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் நடத்தப்பட்ட "பாதிக்கப்பட்டோரை மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு வருவதற்கு முன்னர்

மேற்கொள்ள வேண்டிய சிகிச்சை முறைகள்'' குறித்த பயிற்சிக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்கள் பயிற்சி பெற அனுப்பி வைக்கப்பட்டனர்.

பேரிடர் மேலாண்மை மற்றும் இடர் நீக்கும் திட்டத்தின்கீழ், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு ''திறன் மேம்படுத்தும்'' பயிற்சி தாம்பரத்தில் உள்ள மாநிலப் பயிற்சி மையத்தில் அளிக்கப்பட்டு வருகிறது. **22.1.2014** முதல் **22.3.2014** வரையிலான காலத்தில், **355** அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

## X. கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு

இத்துறையில் மொத்தம் உள்ள **304** நிலையங்களில், தற்போது **216** நிலையங்கள் அவற்றிற்கு சொந்தமான அரசு கட்டடங்களிலும்,

88 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கான கட்டடம் கட்ட தோராயமாக 45 சென்ட் நிலம் தேவைப்படுகிறது. ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்திற்கு 2300 சதுரஅடி பரப்பளவுள்ள கட்டடம் கட்ட தோராய மதிப்பீடு 60 லட்சம் ரூபாய் ஆகும்.

கட்டுமானப் பணிகளில் இத்துறைக்கும் காவல் துறைக்குமிடையே ஒருங்கிணைந்த செயல்பாடு ஏற்படும் வகையில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் மற்றும் அலுவலர்களுக்கான குடியிருப்பு கட்டடங்கள் கட்டும் பணி தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம் மூலம் மேற்கொள்ளப்படுமென உள் துறையின் 30.08.2011 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.479—ன்படி ஆணையிடப்பட்டுள்ளது.

## XI. தீத் தடுப்பு முன் முயற்சிகள்

### i) தீத் தடுப்பு

மக்களுக்கு தீப்பாதுகாப்பு மற்றும் தீத் தடுப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில், பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மற்றும் நெருக்கடியான குடியிருப்புப் பகுதிகளில் தீத் தடுப்பு குறித்த உத்திகள் மற்றும் பேரிடர்களின்போது உயிரை பாதுகாத்தல் போன்றவை குறித்து செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. இத்தகைய செயல்முறை விளக்கங்கள் **2013–**ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் **18,958** இடங்களில் நடத்தப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு ஆபத்தில்லா சூழ்நிலையினை ஏற்படுத்தி தருவதற்காக, பள்ளியில் போதுமான தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பதினை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு பள்ளிகள் தங்களது

எல்லைக்குட்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தினைச் சேர்ந்த நிலைய அலுவலரிடமிருந்து, தடையின்மை சான்று பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. **2013–**ஆம் ஆண்டில், தடையின்மை சான்று வழங்கும் பொருட்டு **10,654** பள்ளிகள் நிலைய அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. தீப்பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை தொடர்பாக ஒத்திகைப் பயிற்சிகளும் மற்றும் செயல்முறை விளக்கங்களும் **2013–**ஆம் ஆண்டில் **6,693** கல்வி நிறுவனங்களில் நடத்தப்பட்டன.

தீ விபத்து நேரிடும் அவசர காலங்களில் பாதுகாப்பாக வெளியேறுதல், தப்பித்துச் செல்லும் வழிகள் கண்டறிதல் மற்றும் மீட்கும் வழிமுறைகள் குறித்து பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டு **21.1.2014** அன்று

பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு பாதுகாப்பாக வெளியேறும் ஒத்திகைப் பயிற்சிகள் நடத்தப்பட்டடன.

பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு அடிப்படை தீத்தடுப்பு திறன்கள் மற்றும் மீட்கும் பணி உத்திகள் குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு அவர்கள் தன்னார்வத் தொண்டர்களாக சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இவர்கள் தீ விபத்து நிகழும் இடங்களில் ஆரம்ப நிலையில் பணியில் ஈடுபடுதல் மற்றும் சம்பவ இடத்திற்கு வரும் உள்ளூர் தீயணைப்புப் படையினருக்கு தீயணைப்பு மற்றும் பிற அவசர காலப் பணிகளில் உதவிகரமாக செயல்படுதல் போன்ற பணிகளை செய்து வருகிறார்கள்.

### ii) தீப்பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள்

பொதுமக்கள் மற்றும் மாணவர்களை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின்

செயல்பாட்டிற்கு உறுதுணையாக ஈடுபடுத்தும் நோக்கத்துடன் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களிலும் தீப்பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள் சேர்க்கப்படுகின்றார்கள்.

### iii) திரையரங்குகளில் தீத்தடுப்பு

திரையரங்குகளுக்கு உரிமம் வழங்குவதற்கு முன்பு கீழ்க்காணும் முக்கிய தீத்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என ஆய்வு செய்யப்படுகிறது.

1. திரையரங்குகளின் உள்ளே போதுமான தீயணைப்பான்களும் மற்றும் படச்சுருள் இயக்குபவர் அறையில் முதல் உதவிப் பெட்டியும் கட்டாயமாக இருத்தல் வேண்டும்;

2. பல திரையரங்குகள் ஒருங்கிணைந்த, அடுக்குமாடி கட்டடத்தில் நீர் தெளிப்பான்கள் மற்றும் புகை அறியும் கருவி கட்டாயமாக அமைக்கப்பட வேண்டும்;
3. மணல் மற்றும் தண்ணீரால் நிரப்பப்பட்ட தீ வாளிகள் போதுமான அளவு வைத்தல் வேண்டும்:
4. தீயணைப்புப் பணியினை தடையின்றி தொடர்ச்சியாக மேற்கொள்ள தண்ணீர் சேமிப்புத் தொட்டி அமைத்தல் வேண்டும்;
5. பொய் மேற்கூரைகள் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அலங்கார வடிவமைப்புகள் தீயால் பாதிக்கப்படாத பொருட்களால் அமைக்கப் பட்டிருக்க வேண்டும்;

6. அவசரகால வெளியேறும் வழிகள் போதுமான அளவு அமைக்கப்பட வேண்டும்;
7. திரையரங்குகளில் பொருத்தப்பட்டுள்ள அனைத்து தீயணைப்புக் கருவிகளை கையாள்வதிலும் மற்றும் பராமரிப்பதிலும் பணியாளர்கள் மற்றும் வேலையாட்களுக்கு பயிற்சி அளித்தல் வேண்டும்;

மாநிலத்திலுள்ள அனைத்து திரையரங்குகளையும் ஆண்டு தோறும் ஆய்வு செய்வதற்காக இத்துறையின் மாவட்ட அலுவலரின் தலைமையில் பல்வேறு துறையினரை உள்ளடக்கிய குழு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. கட்டடங்களில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக திரையரங்குகள், தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள் உட்பட

35,745 கட்டடங்கள் இத்துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## iv) கோடைக் காலத்தில் ஏற்படும் தீ விபத்துகள்

ஆண்டு தோறும் ஏப்ரல், மே, ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் ஆபத்து நிறைந்த பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளை காலவிரயமின்றி உடனடியாக எதிர்கொள்ளும் நோக்கில் ஊர்திகளை ரோந்துப் பணியில் ஈடுபடுத்தும் முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த உத்தி பதில் செயல்பாடு நேரத்தை மிகவும் குறைத்துள்ளதுடன், பெரிய அளவில் விபத்து ஏற்படாமல் தடுத்து சேதத்தினை வெகுவாக குறைத்துள்ளது.

## v) தீயணைப்புத் தொண்டு நாள்

ஆண்டு தோறும், ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள் தொடங்கி ஒரு வார காலத்திற்கு

தீயணைப்புத் தொண்டு நாள் இத்துறையால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அனைத்து பிரிவு மக்களிடையே பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதே தீயணைப்பு தொண்டு நாள் கடைபிடிப்பதன் முதன்மையான நோக்கமாகும். இந்த ஆண்டில் பரப்புரை செய்யவேண்டிய சொற்றொடர் "தீத்தடுப்பே சிறந்த காப்பீடு" (Fire Prevention is the Best Insurance) என்பதாகும். இத் தீயணைப்புத் தொண்டு வாரத்தில் தீப்பாதுகாப்பு குறித்த பரப்புரைகள், சொற்பொழிவுகள் மற்றும் கட்டுரைப் போட்டிகள் போன்றவை மாநிலம் முழுவதும் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறையானது, தன்னார்வத் தொண்டர்கள், சுய உதவி குழுக்கள் மற்றும் பெரிய அபாயகரமான தொழிற்சாலைகள் ஆகியவற்றுடன் இணைந்து பாதுகாப்பு குறித்த பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் ஒத்திகை

பயிற்சிகள் நடத்தி வருகின்றன. செய்தித் தாள்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் வாயிலாக பிரச்சாரங்கள் காலமுறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## XII. தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகள்

2013ஆம் ஆண்டில் இத்துறை 25,413 தீ விபத்து அழைப்புகளில் பணியாற்றி, 95 மனித உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. மாநிலம் முழுவதும் தீயின் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்ட உடமைகளின் உத்தேச மதிப்பு 336.40 கோடி ரூபாய் ஆகும். மேலும், கனமழை மற்றும் வெள்ளக் காலங்களில், இத்துறை 13,607 மீட்பு அழைப்புகளை ஏற்று சீரிய முறையில் மீட்புப் பணியினை மேற்கொண்டு 3,706 பேர்களை காப்பாற்றியுள்ளது.

2013–ஆம் ஆண்டில் தீபாவளி பண்டிகையின்போது, சென்னை நகரில், நெரிசல் மிகுந்த பாரிமுனை பகுதியில் தற்காலிக பட்டாசு விற்பனை கடைகள் அமைக்க தடை செய்யப்பட்டது. இதற்கு பதிலாக, தீவுத் திடலில் திறந்த வெளியில் அமைக்க அனுமதிக்கப்பட்டது. மேலும், இத்துறையானது தீத் தடுப்பு குறித்து சீரிய பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், தீ விபத்து ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் தீயணைப்பு ஊர்திகளுடன், குழுவினர் 24 மணி நேரமும் நிலைநிறுத்தப்பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள். இந்த நடவடிக்கையின் காரணமாக, 2012–ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் 911 தீ விபத்து அழைப்புகள் வந்த நிலையில், 2013–ஆம் ஆண்டின் தீபாவளி பண்டிகை காலத்தின்போது 301 தீ விபத்து அழைப்புகள் மட்டுமே வந்தன.

## <u>XIII. நலத் திட்டங்கள்</u>

### i) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேமநல நிதி

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேம நல நிதியானது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் துயரக் காலங்களில் நிதி உதவி அளிக்கவும் மற்றும் அவர்களது நலனை மேம்படுத்துவதற்காகவும் **1962**ஆம் ஆண்டில், ஏற்படுத்தப்பட்டது. இந்நிதியிலிருந்து,

(அ) காசநோய், தொழுநோய் மற்றும் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் அவதியுறும் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் ஊட்டச்சத்துள்ள உணவு வழங்குவதற்காகவும்;

(ஆ) தீயணைப்புப் பணியாளர்களின் குழந்தைகளின் உயர் கல்விச் செலவிற்காகவும்;

(இ) உயிரிழந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும்; மற்றும்

(ஈ) உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ உயிரிழந்துவிட்டால், அவர்களது இறுதி சடங்கு செலவிற்காகவும்,

நிதி உதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில், தற்போது **5,166** பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் **2013–2014**–ஆம் ஆண்டில் **37.88** லட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | உதவித் தொகை விவரம் | தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | உறுப்பினர்களுடைய 210 குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்காக | 10.02 |
| 2. | பணியாளர்களின் குழந்தைகளில் 10வது மற்றும் 12வது வகுப்புகளில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு வழங்குதல் மற்றும் 85 சதவிகிதமும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசு. இப்பரிசுத் தொகை உறுப்பினர்களுடைய 155 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது | 3.69 |
| 3. | 191 பணியாளர்கள் ஓய்வு பெற்ற போது, அடையாளத் தொகையாக அளிக்கப்பட்ட நிதியுதவி | 10.49 |

| | | |
|---|---|---|
| 4. | உயிரிழந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவித் தொகை | 13.68 |
| | **மொத்தம்** | **37.88** |

இந்நல நிதிக்கு மானியமாக ஒவ்வோராண்டும் அரசு 12 லட்சம் ரூபாய் வழங்கி வருகிறது.

## ii) குடும்ப நல நிதித் திட்டம்

பணியிலிருக்கும் போது உயிரிழக்கும் பணியாளர் குடும்பத்தினருக்கு, குடும்ப நல நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக 1,50,000/– ரூபாய் வழங்கப்படுகிறது.

## iii) கருணைத்தொகை

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்கள், தமது பணியில் ஈடுபடும்போது எதிர்பாரா விபத்து ஏற்பட்டு பாதிப்படையும்போது, கருணைத் தொகை வழங்கப்படுகிறது. இதன்படி

வழங்கப்படும் நிதி உதவிகளின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | உதவித் தொகை விவரம் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| (i) | பணியாற்றும் போது உயிரிழந்தால் | 5,00,000/– |
| (ii) | பணியாற்றும் போது நிரந்தர ஊனம் அடைபவர்களுக்கு | 1,00,000/– |
| (iii) | பணியாற்றும் போது கடுமையாக காயம் அடைபவர்களுக்கு | 20,000/– |
| (iv) | பணியாற்றும் போது சிறு காயம் அடைபவர்களுக்கு | 10,000/– |

**iv) குழுக் காப்பீட்டுத் திட்டம்**

குழுக் காப்பீட்டுத் திட்டமானது அனைத்து நிலைகளிலும் உள்ள தீயணைப்பு களப்பணியாளர்களை உள்ளடக்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. பணியாளர்கள் பணியாற்றும் போது உயிரிழக்க நேரிட்டால்

பணியாளரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின்கீழ் நிவாரணம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து நிலைகளிலும் உள்ள பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையானது 2012–2013–ஆம் ஆண்டில் ஒரு லட்சம் ரூபாயிலிருந்து இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. மேலும், மாவட்ட அலுவலர், துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இந்நிவாரணத் தொகை இரண்டு லட்சம் ரூபாயிலிருந்து நான்கு லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

### v) உணவுப் பொருட்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலை கடைகள் மூலமாக, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும்

தீயணைப்போர் முதல் உதவி மாவட்ட அலுவலர் பதவி வரையிலான பணியாளர்களுக்கு, விலையில்லா அரிசியும், கோதுமை, ரவை / மைதா, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் 50 சதவிகித மானிய விலையிலும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கென ஆண்டொன்றுக்கு 57 லட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது.

## vi) பணியாளர்களுக்கான உணவுப் படி

நிலைய அலுவலர் பதவிக்கு கீழ் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி களப்பணியாளர்களுக்கு தீ விபத்து, மீட்புப் பணி அழைப்பு மற்றும் அவசரக் காலங்களில் படை திரட்டும் பணியில் ஈடுபடும் போது (mobilization) உணவுப்படி வழங்கப்பட்டு வருகிறது. இந்த உணவுப் படியானது சென்னை மாநகரத்தில் நாள் ஒன்றிற்கு 100/– ரூபாயிலிருந்து 200/– ரூபாயாகவும், பிற பகுதிகளில்

நாள் ஒன்றிற்கு 75/– ரூபாயிலிருந்து 150/– ரூபாயாகவும், அரசு ஆணை (நிலை) எண்.728, உள்துறை, நாள் 17.9.2013–ன்படி ஆண்டொன்றிற்கு 2.36 கோடி ரூபாய் கூடுதல் தொடர் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**vii) மானிய விலையில் பொருட்கள் வாங்க சிறப்பு அங்காடிகள்**

நாட்டிலேயே முதல்முறையாக, தமிழ்நாட்டில், 2012–2013–ஆம் ஆண்டில், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்காக சிறப்பு அங்காடிகள் அமைக்கப்பட்டன. இச்சிறப்பு அங்காடிகள் தற்சமயம் ஆவடி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இதற்கென முதல் கட்டமாக 1 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டது. காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத்

துறைகளின் சீருடைப் பணியாளர்களின் குடும்பங்கள் இச்சிறப்பு அங்காடிகள் மூலம் பயன்பெற தகுதியுடையவராவார்கள். இவ்வங்காடிகளின் மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கு மதிப்பு கூட்டு வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், அவை சந்தை விலையை விட மிகவும் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

**viii) "உங்கள் சொந்த இல்லம்" திட்டம்**

மேலக்கோட்டையூர் கிராமத்தில் **2,673** வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளதில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு **128** வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்களில் வீட்டு கடன் பெற தகுதியுடைய நபர்களுக்கு வீட்டு கடன் வழங்க எனது அரசு **8.71** கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது.

## ix) குடியிருப்புகள் கட்டுதல்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்கள், ஆபத்து காலங்களில் 24 மணி நேரமும் பொதுமக்களுக்காக சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களின் செயல் திறனை மேம்படுத்தவும், தேவை ஏற்படும்போது அவர்களை விரைவாக பணிக்கு அழைக்கவும் அவர்களது நிலையங்களுக்கு அருகில் குடியிருப்புகள் அளிப்பது இன்றியமையாததாகும். இத்துறையைச் சேர்ந்த களப்பணியாளர்கள் அனைவரும், பணி விதிகளின்படி வாடகையில்லா குடியிருப்புகள் பெற, தகுதி உடையவராவார்கள். தற்போது, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் 1,080 குடியிருப்புகள் உள்ளன. மேலும், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தால், 16 இடங்களில் 216 குடியிருப்புகள் கட்டுமானம் செய்யும் பணி

மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலும் படிப்படியாக குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.

## XIV. ஊக்குவித்தலும், ஊக்கத் தொகைகளும்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது நிகழ்விடங்களில் அவர்கள் வெளிப்படுத்தும் வீரதீரச் செயலினைப் பாராட்டும் வகையிலும், மேலும் அவர்களது பணியினைச் சிறந்த முறையில் செயலாற்றும் வகையில் ஊக்குவிக்கவும், பின்வரும் பதக்கங்கள் மற்றும் விருதுகள் அரசால் வழங்கப்படுகின்றன:–

### i. தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்)

தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்) ஒவ்வொரு

ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று வழங்கப்படுகிறது.

இப்பதக்கம் பெறுபவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ஒட்டுமொத்த பரிசுத் தொகையாக 4,000/– ரூபாய் முதல் 10,000/– ரூபாய் வரை பெறத் தகுதியுடையவராவார்கள். 2013ஆம் ஆண்டில், பாராட்டத்தக்க பணிகளுக்கான பதக்கங்கள் 10 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சரின் வீர தீர செயலுக்கான பதக்கங்கள் (அண்ணா பதக்கம்) 2012–ஆம் ஆண்டில் 5 பணியாளர்களுக்கும் மற்றும் 2013–ஆம் ஆண்டில் 3 பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. வீரதீர பதக்கம் பெறுபவர்கள் மாதாந்திர பணப்பயனாக 500/– ரூபாய் பெறுவர். இனி வருங்காலங்களில், தமிழ்நாடு முதலமைச்சரின் வீர தீர செயலுக்கான பதக்கங்கள் (அண்ணா

பதக்கம்) பெறுபவர்களுக்கு மாதாந்திர பணப்பயன் **500/–** ரூபாய்க்கு பதிலாக ஒட்டுமொத்த வெகுமதித் தொகையாக **5** லட்சம் ரூபாய் வழங்கிட அரசு உத்திரவிட்டுள்ளது.

## ii. தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம்

தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கமானது ஒவ்வோராண்டும் பொங்கல் திருநாளன்று வழங்கப்படுகிறது. தண்டனைகள் ஏதுமின்றி **10** ஆண்டு காலத்திற்கும் மேலாக தூய்மையாகப் பணிபுரிந்த பணியாளர்களுக்கு (நிலைய அலுவலர் பதவிக்கு கீழுள்ள பணியாளர்களுக்கு) இப்பதக்கம் வழங்கப்படுகிறது. **2014**ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு, இப்பதக்கமானது முன்னணித் தீயணைப்போர் / இயந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் தீயணைப்போர் ஆகிய பதவிகளில்

பணியாற்றும் 119 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பதக்கம் பெறும் அனைவரும் மாதாந்திர பணப்பயனாக 200 ரூபாய் பெறுவர்.

### iii. சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பணிப் பதக்கம்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிய பணியாளர்களின் திறமையினை போற்றும் வகையில் வழங்கப்படும் இப்பதக்கமானது என்னுடைய அரசால் 2001–ம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் தீத்தொண்டு நாளான ஏப்ரல் 14–ஆம் நாளன்று மூன்று பதக்கங்களுக்கு மிகாமல், நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்போர், தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவி வகிப்போர் ஆகியோருக்கு தலா ஒரு

பதக்கம் வழங்கப்படுகின்றன. இப்பதக்கம் பெறுபவர்களுக்கு **8** கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் ஒட்டுமொத்த பரிசுத் தொகை **2,000/–** ரூபாய் முதல் **3,000/–** ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

### iv) அண்ணா வீர தீர பதக்கம்

அண்ணா வீர தீர பதக்கமானது, வீர தீரச் செயல் புரிந்த பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது. இப்பதக்கமானது, ஆண்டு தோறும் குடியரசு தினத்தன்று வழங்கப்படுகிறது. திருவரங்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தினைச் சேர்ந்த (காலஞ்சென்ற) தீயணைப்போர் எண்.**6420** ஏ.குணேந்திரன் என்பவர் ஸ்ரீரங்கம், மங்கம்மா நகருக்கு அருகில் கீதாபுரத்தில் காவேரி ஆற்றில் மீட்புப் பணியாற்றும்போது தன்னலமற்ற தைரியத்துடன்

வீரதீர செயலினை வெளிப்படுத்தியதற்காக 2014ஆம் ஆண்டிற்கான வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கம் அவரது மறைவிற்கு பின் வழங்கப்பட்டது. இவ்விருதானது 5,000/– ரூபாய் மதிப்புள்ள தங்கப் பதக்கம் மற்றும் அதனுடன் சான்றிதழும் மற்றும் பரிசுத் தொகை 1,00,000/– ரூபாய் கொண்டதாகும்.

மேற்கூறியவை தவிர, (i) சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் மெச்சத்தக்க / பாராட்டத்தக்க பணிக்கான குடியரசுத் தலைவரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் (ii) சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் வீர தீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் ஆகியன மாநில அரசின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசால் வழங்கப்படுகின்றன. 2013–ஆம்

ஆண்டிற்கான சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் குடியரசுத் தலைவரின் பாராட்டத்தக்க தீயணைப்புப் பணிக்கான பதக்கம் 5 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. 2014–ஆம் ஆண்டிற்கான குடியரசு தினத்தன்று வழங்கப்படும் குடியரசுத் தலைவரின் பாராட்டத்தக்க தீயணைப்புப் பணிக்கான பதக்கம் 6 பணியாளர்களுக்கும் மற்றும் 2014–ஆம் ஆண்டிற்கான குடியரசு தினத்தன்று வழங்கப்படும் குடியரசுத் தலைவரின் வீரதீர செயலுக்கான தீயணைப்புப் பதக்கம் ஒரு பணியாளருக்கும் வழங்கப்பட்டது.

## XV. முன் முயற்சிகள்

பொது மக்களுக்கு ஆற்றி வரும் சேவையின் தரத்தினை மேம்படுத்தவும் மற்றும் துறையில் உள்ள பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், இந்த அரசானது கடந்த

**3** ஆண்டுகளில் பின்வரும் முக்கிய முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது:-

- **2.36** கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம், மதுரை மாவட்டம் டி.கல்லுப்பட்டி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைக்கப்பட்டன.
- **42.08** லட்சம் ரூபாய் செலவில் இராமநாதபுரம்—சிவகங்கை கோட்டத்தை இரண்டாகப் பிரித்து சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய கோட்டம் உருவாக்கப்பட்டது.
- **55.89** லட்சம் ரூபாய் செலவில் நீலகிரி மாவட்டத்தில் ஊட்டியை தலைமையிடமாக கொண்டு புதிய கோட்டம் உருவாக்க ஒப்பளிக்கப்பட்டது.

- சென்னை மாநகரப் பயன்பாட்டிற்காக 45.70 கோடி ரூபாய் செலவில் 54 மீட்டர் உயரம் செல்லக்கூடிய வானோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்தி ஒன்று மற்றும் 101 மீட்டர் உயரம் வரை நீளக்கூடிய வானோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்திகள் இரண்டு, ஆக மொத்தம் 3 ஊர்திகள் கொள்முதல் செய்ய ஒப்பளிக்கப்பட்டது. மேலும், ஒரு வானோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்தியினை இயக்குவதற்குரிய பணியிடங்கள் 39.08 லட்சம் ரூபாய் தொடர் செலவினத்தில் ஏற்படுத்த ஒப்பளிக்கப்பட்டது.
- 3.20 கோடி ரூபாய் செலவில், மாநகரங்களின் உபயோகத்திற்கு 9 மேம்படுத்தப்பட்ட நவீனரக நீர்தாங்கி வண்டிகள், உயர் அழுத்த பம்ப் பொருத்தப்பட்ட விரைந்து செல்லும் திறன் கொண்ட 8 சிறியரக நீர்தாங்கி வண்டிகள், வெட்டும் மற்றும் விரிக்கும்

திறன்கள் ஒருங்கிணைந்த 22 கோம்பி கருவிகள் வாங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்டது.

- 96 லட்சம் ரூபாய் செலவில் அம்பத்தூர், திருச்சி, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் உபயோகத்திற்கு 4 சிறிய நுரைதகர்வு ஊர்திகள் ஒப்பளிக்கப்பட்டது.
- 71 லட்சம் ரூபாய் செலவில் துறையின் பயன்பாட்டுக்காக நான்கு சக்கர வாகனங்கள் 14 மற்றும் இரு சக்கர வாகனங்கள் 2 ஒப்பளிக்கப்பட்டது.
- 22 லட்சம் ரூபாய் செலவில் 38 கணினிகள், அச்சுக் கருவிகள் மற்றும் 6 நகலெடுக்கும் கருவிகள் ஒப்பளிக்கப்பட்டது.
- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கான கட்டடங்கள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் தமிழ்நாடு காவலர்

வீட்டு வசதி கழகத்தின் மூலம் கட்டுமானம் செய்ய அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

- தீயணைப்போர் பதவியில் ஆண்டுதோறும் ஏற்படும் காலியிட மதிப்பீட்டினை துறைத்தலைவரே ஒப்புதல் செய்து அதனை நேரடியாக தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு குழுமத்திற்கு அளிக்க ஏதுவாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்பட்டது.
- பணியாளர்களின் உணவுக் கட்டணம் நாள் ஒன்றிற்கு சென்னையில் பணிபுரிபவர்களுக்கு 80/– ரூபாயிலிருந்து 100/– ரூபாயாகவும் மற்றும் புறநகரில் பணிபுரிபவர்களுக்கு 55/– ரூபாயிலிருந்து 75/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு, பின்னர் காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக, சென்னையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு

100/– ரூபாயிலிருந்து 200/– ரூபாயாகவும் மற்றும் பிற பகுதிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 75/– ரூபாயிலிருந்து 150/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

- காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக உதவி மாவட்ட அலுவலர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படும் இடர்படி 180/– ரூபாயிலிருந்து 400/– ரூபாயாகவும் மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும் இடர்படி 210/– ரூபாயிலிருந்து 450/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.
- மோப்பநாய்ப்படைப் பிரிவிலுள்ள மோப்ப நாய் ஒவ்வொன்றிற்கும் உணவுக் கட்டணம் நாளொன்றிக்கு 54/– ரூபாயிலிருந்து 100/– ரூபாயாக உயர்த்தப்பட்டது.
- “உங்கள் சொந்த இல்லம்” என்ற தனிச் சிறப்பு வாய்ந்த திட்டத்தின் கீழ், வீடுகள் பெற

காவல்துறை, சிறைத்துறைப் பணியாளர்களுடன் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களும் தகுதியுடையவர்களாக சேர்த்து ஆணை வழங்கப்பட்டது.

- 28 கோடி ரூபாய் செலவில், தீயணைப்புப் பணியாளர்களுக்கு தீயிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் விதமாக 1980 ஜோடி பணியாளர் தற்காப்பு உடைகள் வாங்க ஒப்பளிக்கப்பட்டது.
- 5.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இயக்குநரகத்திற்கு தலைமையக கட்டடம் புதியதாக கட்ட ஒப்பளிக்கப்பட்டது.
- தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் இயந்திரகம்மியர் ஓட்டுநர் பதவிகளில் உள்ளவர்கள் பதவி உயர்வு பெறுவதில் இருந்த தேக்க நிலையினைக் களையும்வகையில் 2012–2013ஆம் ஆண்டில் 52.87 லட்சம் ரூபாய் ஆண்டு தொடர் செலவினத்தில் 165 இயந்திரகம்மியர் ஓட்டுநர்

பதவிகள் நிலைய அலுவலர் (போக்குவரத்து) பதவியாக தரம் உயர்த்தப்பட்டது.

- தீயணைப்போர் பதவிக்கு புதியதாக **791** நபர்கள் பணி நியமனம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- பல்பொருள் அங்காடிகள் மூலம் குறைந்த விலையில் பொருட்களை பெறும் சலுகையினை நாட்டிலேயே முதன் முறையாக காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- மாவட்ட அலுவலர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநர்களுக்கான குழுக் காப்பீட்டுத் தொகை இரண்டு லட்சம் ரூபாயிலிருந்து நான்கு லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

- பணியாற்றும்போது உயிரிழக்கும் பணியாளர்களது குடும்பத்தினருக்கு குழுக் காப்பீடு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிதி உதவித் தொகை 1 லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- 92.12 லட்சம் ரூபாய் செலவில் உரிய மீட்பு உபகரணங்களுடனான ஏற்றிச் செல்லும் 4 வாகனங்கள், நீலகிரி மாவட்டத்தின் பயன்பாட்டிற்கு வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
- இரண்டு துணை இயக்குநர் பணியிடங்கள் இணை இயக்குநர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- 9.50 லட்சம் ரூபாய் செலவில் மூச்சுக் கருவிகளுக்கு பிராணவாயு நிரப்புவதற்குத் தேவைப்படும் ‘‘மூச்சுக் காற்று நிரப்பும் கருவி’’ (Breathing Air-Compressor) வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- “கோட்ட அலுவலர்” என்ற பதவி “மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்” என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இத்துறையினை வலுப்படுத்தும் விதமாக நவீன தீயணைப்பு கருவிகள் மற்றும் ஊர்திகள் வழங்கும் வகையில், 10 தரம் உயர்த்தப்பட்ட நீர்தாங்கி வண்டிகளும், 52 விரைவு ஊர்திகளும், 52 அதிக அழுத்தப் பம்புகள் (விரைவு ஊர்திகளின் மேல் பொருத்தக் கூடியது) மற்றும் “வெட்டும் மற்றும் விரிக்கும்” திறன் ஒருங்கிணைந்த 38 கருவிகளும் மொத்தம் 9.45 கோடி ரூபாய் செலவினத்தில் வாங்கப்பட்டுள்ளன.
- அனைத்து தீயணைப்பு வீரர்களும், ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டியதை உறுதி செய்யும் வகையில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 550

தீயணைப்போர்களுக்கு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான பயிற்சி அளித்திட **21.29** லட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

- சென்னை மாநகராட்சி விரிவாக்கப் பகுதியின் கீழ் வரும் துரைப்பாக்கம், வேளச்சேரி, விருகம்பாக்கம், மதுரவாயல் மற்றும் மேடவாக்கம் ஆகிய **5** இடங்களில் மொத்தம் **3.70** கோடி ரூபாய் செலவில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ஊர்திகள் நல்ல நிலையில் பராமரிப்பதை உறுதிபடுத்தும் வகையில் ஊர்திகளை பழுது நீக்கம் / உதிரிபாகங்கள் மாற்றுவதற்கான செலவினம் ஒப்பளிப்பு செய்ய இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் / துணை இயக்குநர்களுக்கு ஏற்கனவே இருந்த அதிகாரம் முறையே **20,000/–** ரூபாயிலிருந்து **60,000/–** ரூபாயாகவும்

மற்றும் 10,000/– ரூபாயிலிருந்து 30,000/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல், தீயணைப்பு ஊர்திகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்த்தொட்டிக்கு பழுது நீக்கம் செய்தல் மற்றும் புதிதாக மாற்றம் செய்யும் பணிக்கு இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு ஒப்பளிப்பு அதிகார வரம்பு 50,000/– ரூபாயிலிருந்து 1,50,000/– ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், சிறப்பு நேர்வாக வானோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்திகளின் பழுது நீக்க பணிகளுக்கு இயக்குநரது ஒப்பளிப்பு அதிகார வரம்பு 20,000/– ரூபாயிலிருந்து 1,50,000/– ரூபாயாகவும் மற்றும் மேற்காணும் வாகனத்திற்கு காலமுறையாக எண்ணெய் மாற்றம் செய்வதற்கான அதிகார வரம்பு 8,000/– ரூபாயிலிருந்து 50,000/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

## XVI. நிறைவுரை

பொதுமக்களிடையே தீத்தடுப்பு மற்றும் தீ அபாயங்களை தவிர்த்தல் போன்றவற்றில் மேம்படுத்தப்பட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு புதுமையான வழிமுறைகள் மாநிலத்தில் ஏற்படும் தீ விபத்துக்களை குறைப்பதில் மிகச் சிறப்பான பலனை அளித்துள்ளன. துறை பணியாளர்களின் அறிவாற்றல் மற்றும் திறனை மேம்படுத்துவதும், ஏற்கனவே பெற்றுள்ள உயரிய தரத்தினை நிலைநிறுத்தும் வகையிலும், உலக அளவில் சிறந்தது என ஒப்பிடத்தக்க வகையில் மேலும் சிறப்புற பணியாற்ற புதிய சாதனங்களை கண்டறிவதை உறுதி செய்வதும் எனது அரசின் முயற்சியாக இருக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, எனது வழிகாட்டுதலாலும், அரசின் தொடர் ஆதரவினாலும் இத்துறையானது


சிறந்தமுறையில் திட்டமிட்டு நவீனப்படுத்தப்பட்டு மென்மேலும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. அதிகரித்து வரும் உயர்மாடிக் கட்டடங்கள், வணிக நிறுவனங்கள், பெருகி வரும் நகரமயமாக்கல், தொழில்மயம் மற்றும் அனைத்து விதமான பேரிடர்கள் ஆகியவற்றினால் உருவாகும் சவால்களை நிபுணத்துவம் வாய்ந்த மிகச்சிறந்த அமைப்பான இத்துறை எதிர்கொண்டு வருகிறது.

**ஜெ ஜெயலலிதா**
**முதலமைச்சர்**

## அட்டவணை – I

**தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

**நிருவாக அமைப்பு**




குறிப்பு:– அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை அந்தந்தப் பதவிகளில் உள்ளோர் எண்ணிக்கையினைக் குறிப்பதாகும்.

போ.வ.: – போக்குவரத்து

## அட்டவணை – II

### மண்டலங்களில் செயல்படும் நிலையங்கள் மற்றும் பிற அலகுகள்

**வட மண்டலம்**

| கோட்டம் | தீமீபநி | தீதகு | பிற |
|---|---|---|---|
| 1. வட சென்னை | 9 | 1 | 1* |
| 2. தென் சென்னை | 9 | 1 | 1* |
| 3. மத்திய சென்னை | 7 | – | – |
| 4. சென்னை புறநகர் | 9 | – | – |
| 5. வடமண்டலம் | – | – | 2** |
| மொத்தம் | 34 | 2 | 4 |

**வடமேற்கு மண்டலம்**

| கோட்டம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. வேலூர் | 16 | 1 |
| 2. திருவண் ணாமலை | 12 | –– |
| 3. காஞ்சிபுரம் | 10 | 1 |
| 4. திருவள்ளூர் | 8 | –– |
| மொத்தம் | 46 | 2 |

**மத்திய மண்டலம்**

| கோட்டம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. திருச்சிராப் பள்ளி | 8 | 1 |
| 2. புதுக்கோட்டை | 12 | 1 |
| 3. தஞ்சாவூர் | 9 | – |
| 4. நாகப்பட்டினம் | 11 | – |
| 5. கடலூர் | 15 | – |
| 6. விழுப்புரம் | 12 | – |
| 7. கரூர் | 4 | – |
| 8. பெரம்பலூர் | 6 | – |
| 9. திருவாரூர் | 11 | – |
| மொத்தம் | 88 | 2 |

**தென்மண்டலம்**

| கோட்டம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. மதுரை | 10 | – |
| 2. திருநெல் வேலி | 14 | – |
| 3. கன்னியா குமரி | 7 | – |
| 4. தூத்துக்குடி | 9 | – |
| 5. விருதுநகர் | 8 | 1 |
| 6. ராமநாதபுரம் | 11 | – |
| 7. சிவகங்கை | 6 | – |
| 8 தேனி | 8 | – |
| மொத்தம் | 73 | 1 |

**மேற்கு மண்டலம்**

| கோட்டம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | 7 | 1 |
| 2. ஊட்டி | 3 | |
| கோத்தகிரி | 1 @ | |
| 3. ஈரோடு | 9 | 1 |
| 4. திருப்பூர் | 7 | 1 |
| 5. சேலம் | 11 | 1 |
| 6. தருமபுரி | 4 | 1 |
| ஒகேனக்கல் | 1@ | |
| 7. கிருஷ்ணகிரி | 7 | – |
| 8. திண்டுக்கல் | 9 | 1 |
| 9. நாமக்கல் | 4 | – |
| மொத்தம் | 61 + 2 @ | 6 |

மாநிலத்தில் உள்ள மொத்த
தீயணைப்பு மீட்புப் பணி நிலையங்கள் : 302+2 @

<u>பிற நிறுவனங்கள்:</u>

| | |
|---|---|
| மாநில பயிற்சி மையம் | – 1 |
| மாநிலப் பட்டறை | – 1 |
| மீட்புப் பணி நிலையங்கள் | – 2 @ |
| மோப்ப நாய் படை | – 1 |
| இசை மேளக் குழு | – 1 |

| | |
|---|---|
| குறிப்பு– தீமீபநி | தீயணைப்பு மீட்பு பணிகள் நிலையம் |
| தீதகு | தீத்தடுப்புக்குழு |
| பிற | புகைப்படப் பிரிவு<br>தீக்கட்டுப்பாட்டறை<br>தகவல் தொடர்பு மையம் |

# அட்டவணை – III

## மாவட்ட வாரியான தீயணைப்பு

## மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்

| வ. எண் | மாவட்டம் | நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரியலூர் | 3 |
| 2. | சென்னை | 34 |
| 3. | கோயம்புத்தூர் | 7 |
| 4. | கடலூர் | 15 |
| 5. | திண்டுக்கல் | 9 |
| 6. | தருமபுரி (ஒகேனக்கலில் உள்ள ஒரு மீட்புப் பணி நிலையம் உட்பட) | 5 |
| 7. | ஈரோடு | 9 |
| 8. | கரூர் | 3 |
| 9. | காஞ்சிபுரம் | 10 |
| 10. | கன்னியாகுமரி | 7 |
| 11. | கிருஷ்ணகிரி | 7 |
| 12. | மதுரை | 10 |
| 13. | நாகப்பட்டினம் | 11 |
| 14. | நாமக்கல் | 4 |

| | | |
|---|---|---|
| 15. | நீலகிரி (கோத்தகிரியில் உள்ள ஒரு மீட்புப் பணி நிலையம் உட்பட) | 4 |
| 16. | புதுக்கோட்டை | 12 |
| 17. | பெரம்பலூர் | 2 |
| 18. | ராமநாதபுரம் | 11 |
| 19. | சேலம் | 11 |
| 20. | சிவகங்கை | 6 |
| 21. | தஞ்சாவூர் | 9 |
| 22. | தேனி | 8 |
| 23. | திருவண்ணாமலை | 12 |
| 24. | திருச்சிராப்பள்ளி | 10 |
| 25. | திருவாரூர் | 11 |
| 26. | திருவள்ளூர் | 8 |
| 27. | தூத்துக்குடி | 9 |
| 28. | திருப்பூர் | 7 |
| 29. | திருநெல்வேலி | 14 |
| 30. | வேலூர் | 16 |
| 31. | விழுப்புரம் | 12 |
| 32. | விருதுநகர் | 8 |
| | **மொத்தம்** | **304** |